1993 பிப்ரவரி 10]

என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறேன். 1988-லே இருந்து 1990 வரை பார்வையற்றோருக்கு 1 சதவீத இட ஒதுக்கீடு என்பது அரசு அலுவலகங்களிலே நடைமுறைப் படுத்தப்படவில்லை. ஆனால் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல் முறையாக பொறுப் பேற்றதற்குப் பின்னால் அந்த ஒரு சதவீத இட ஒதுக்கீடு இன்றுவரை ஒழுங்காக அரசு அலுவலகங்களில் நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்லாவரம் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் பணியிடங்களை நிரப்புவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கோரிக்கை சமூக நலத் துறையினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது,

வினா எண் 59, திருமதி சியாமளா, மாண்புமிகு ஆதிதிரா விடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்

59—

கோவில்பட்டி ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் மாணவர் எண்ணிக்கையை உயர்த்துதல்.

*10319—திருமதி ரெ. சியாமளா:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி ஆதிதிராவிட மாணவர்கள் விடுதியில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவில்பட்டியில் உள்ள அரசு மாணவர் விடுதியில் அனுமதிக் கப்பட்ட மாணவர் எண்ணிக்கையை 1992–93–ஆம் ஆண்டில் 80-லிருந்து85-ஆக உயர்த்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதியில் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரித்ததற்காக எங்களது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 60, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

60—

தமிழ்நாடு மொபெட்ஸ் லிமிடெட் மூலம் 50 சிசி. மொபெட்டுகள் தயாரித்தல்.

*11034—திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஸ்காட் எனப்படும் தமிழ்நாடு மொபெட்ஸ் லிமிடெட் மூலம் தரமான 50 சிசி மொபெட்டுகளை மீண்டும் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செஸ்காட் நிறுவனம் மீண்டும் தரமான 50 சிசி மொபெட்டுகளின் உற்பத்தியை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. இராமசுவாமி ; மாண்புமிகு பேரதைவத் தலைவர் அவர்களே, செஸ்காட் என்கிற தமிழ்நாடு நிறுவனத்தை மொபெட்ஸ் மீண்டும் தொடங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972–73-ஆம் ஆண்டில் அப்பொழுது பிரபலமாக ஓடிக்கொண்டிருந்த இரண்டு சக்கர வாகனங்களான 50 சிசி பற்றித் திட்டமிட தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் ஒரு பிரிவு அமைக்கப்பட்டது. அகமதாபாத்திலுள்ள தரக் கட்டுப்பாடு நிறுவனத்திடமிருந்து தேவையான ஒப்புதலைப் பெறுவது மிகவும் சிரமமாக இருந்தது. அடிக்கடி வாகனங்கள் சோதனை செய்யப்பட்டு தரக்கட்டுப் பாடு நிறுவனம் கூறிய யோசனைகள், மாற்றங்களைச் செய்து